# இந்துசாதனம்

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | ரூ. | 9-40 |
| ,, அரைக்கலம் | ரூ. | 5-00 |
| ,, கால்கலம் | ரூ. | 3-15 |
| ,, ஒரு அங்குலம் | சதம் | 65 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ } யாழ்ப்பாணம்:—குரோதன ஞு புரட்டாதிமீ கூஅ; (1925 செப்டெம்பர் 24) வியாழக்கிழமை. { இலக்கம்—உச


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவமிலே பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுப்பு

ருக்மணிகுக்கர் தான்.

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
| விலை | ரூபா | 13. | 18 | 22 27 | 33. |

விபர புத்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராமபுரம், மதராஸ்.

(Y. 45.)

25-8-23 ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

உலகெங்கும் புகழ்பெற்று அநேக பரிசுகள், நற்சாக்ஷிகள் பெற்றது!

சமது ஜீ. வ. மாத்திரை 50 வாங்குவோர்கட்கு ரூபா 2 விலையுள்ள "மாந்திரீக ரக்ஷை ஆர்டருடன் தேவை என்று எழுதுபவர்கட்கு மட்டும் இனாமாய் (1) அனுப்பப்படும்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்.

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)

இதுவரையிலும் எவராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் அபூர்வ மருந்து.

அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியதுணமுள்ளது!! இதை ஒரு முறை பரிக்ஷை பாருங்கள்.

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்தபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் சிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரிக்ஷை பார்க்கலாம்! பத்தியமில்லை.

150-பில்ஸ் ரு 10-0-0 50-பில்ஸ் ரு. 4-0-0 20-பில்ஸ் ரு. 2-0-0 வி. பி சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி மதராஸ் S. ஸ்ரீனிவாஸய்யங்கார் எழுதுவதை கவனியுங்கள்.

பலஹீனம் நரம்புத்தளர்ச்சி ஞாபகசக்திக்குறைவால் வருந்திக்கொண்டிருக்கேன் அதற்காக நான் அநேக டாக்டர்களிடம் சாப்பிட்டு ஒன்றிலும் குணபடவில்லை. தங்கள் ஜீ. ஏ. மாத்திரைகளைச் சாப்பிட்டு பூர்ண சுகம். வேண்டியவர்கள் இந்த அருமையான மருந்தை வாங்கி யருந்தித் தேகத்தைப்பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே எமதுவிருப்பம். (இதற்கு கியாரண்டி கொடுக்கப்படும்)

## பிரமேக நிவாரணி

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், சுத்த உடனே தீர்க்கும் புட்டி ரூபா 2-0-0.

நற்சாட்சி:—கண்டி, சிலோன் கு. மதார்சாய்பு எழுதுவதைக் கவனியுங்கள்.

உங்கள் பிரமேகநிவாரணியைச் சாப்பிட்டதில் ......உடம்பு இப்போது பூரணசுகம். இன்னொரு ஆளுக்கு வேண்டியதாயிருக்கின்றது. ஒரு புட்டி உடனே அனுப்பவும்.

## புஷ்பிக ரோஸ் பற்பொடி

பொறுக்க முடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும். பல்வலி, பல்லரணை, ஈகிர் கரைவு, ஈகிர் வீக்கம், புழுக்குடைச்சல் முதலிய வியாதிகளை நீக்கி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது. 4 அவுன்ஸ் ரூபா 1. டஜன் ரூபா 2-8-0 பெரிய டின் 1-க்கு ரூபா 2-0-0 வியாபாரிகளுக்கு 6 டஜன் ரூபா 13-0-0 12 டஜன் ரூ. [illegible] 5. வி. பி. சார்ஜ் [illegible]

5-7-22-ல் சுதேசமித்திரன் தங்கள் பேப்பரில் வெளியிட்ட அபிப்பிராயம்:—பல்துலக்குவதற்கு ரம்மியமாயும் நல்லவாசனையுடனிருக்கின்றன, வேணுபவர்கள் பழனி, டி. ஆர். கெ. இடம் பெற்றுக்கொள்க.

கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய்.

பஹிஷ்டை காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை மிக்க ஆச்சரியமாய் அந்தக்ஷணமே நிறுத்தும் காலாகாலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். பலஹீனம், மலபந்தம், சரீரம் இளைக்கும் தன்மை கெர்ப்ப நோய் சம்பந்தமான சகலவியாதிகளையும் நீக்கும். புட்டி ரூபா 2.

மாந்திரீக ரட்சை.

இதை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரிய சித்தி, புத்திரசந்தானம், தொழில் அபிவிருத்தி, உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு அணுகாது; குழந்தைகளின் பிணிமுதலியன நீக்கும் ரக்ஷை 1-க்கு ரூபா 2. ரக்ஷை 6-க்கு ரூபா 9. முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதை செய்தனுப்பப்படும் ரக்ஷை ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேசவாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2 ம் சேர்த்து முற்பணம் அனுப்பினால் மாத்திரம் மருந்து அனுப்பப்படும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

(Q 56. A.)

## இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசு குத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம் மோதிரம், புதுச்சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சினை வயிரக்கப்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

கா. பிளே செட்டி அண் கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து

குளிர் (தலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி மேன்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம்மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறலாம்

(Y 47.)

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு; சாலாமூஸ்லி, சப்பேமூத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளி பஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் நாந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீங்கும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவருதால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீங்கி தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால விருத்தியாகும்.

இந்தலேகியத்தில் விலை றாத்தல் ஒன்றுக்கு ரூபா உ௦. அரைறாத்தலுக்கு ரூபா ௧௦. கால் றாத்தலுக்கு ரூபா [illegible] தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாசிகள் சிப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் பணம் ஆர்டர் அனுப்பவேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய ஆனந்தாஸ வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
சிலோன்

(M. 36.)

பல தலைமுறையாய்
பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி. அய்யங்காருடைய

## அறைக்கீரைவிதைத் தைலம்.



இதன்குணம்!

பித்த மேகரோகனது சிரசுக்கேற அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுள் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற குட்பட்டதாயுள் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, சரப்பன், தேமல், செம்பில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும் இந்த ரோட்டனின் காணப்படாத சமுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்கு குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் கொக்கீரில் போக்காய்த் தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும் 8 நாள்வரையிலும் சுக்கம் மாறாது அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 அவுன்ஸ்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்.
வீ. எஸ். ஜகதம்பகத்தம்மாள்,
மானேஜர்,
8, பிரதான ரஸ்தா, மைலாப்பூர்.

(Q. 67.)

## அதிசிரேஷ்டமான தைலம்.

சராகண்டிப்பான மனுஷனோ ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சரக்குகள் சேர்த்த தைலம்

விட்டில்ஸ் ஓரியன்டல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் திட—திராவ மூலகாரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணாய்ப்போகும் தன்மையே கிடையாது. தின்னயளவு தைலம் பனையளவு குணத்தைத்தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும் குணமுடையது.

3—L—25.




(Y. 41. A.)

## நமதுபத்திரிகை.

சரஸ்வதிபூசை விஜயதசமி என்னுமிவை கள் பொருட்டு "இந்துசாதனம்" வருகிற திங்கட்கிழமை (28-9-25) வெளிவாராது அடுத்த வியாழக்கிழமையே (1-10-25) வழக்கம் போல் வெளிவருமென்பதைப் பத்திரிகாபி மானிகட்கு அதிவிநயத்தோடு தெரிவிக்கின்றோம்.


# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதோதனவுல
புரட்டாதியீ கரு வியாழக்கிழமை.




## நவராத்திரி விரதம்.

### சரஸ்வதிபூசை.

படிக நிறமும் பவளச் செவ்வாயும் [டையும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியி
அல்லும் பகலும் அநவரதமுந் துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

ஆய கலைகள் அறுபத்துநான் கினையும்
ஏய வுணர்விக்கு மென்னம்மை—தூய
உருப்பளிங்குபோல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்குவாரா திடர்.

இது தேவியைக் குறித்து ஒன்பதுதினங்களும் அநுட்டிக்கப்படும் விரதமாகையால் நவராத்திரியெனப் பெயர் பெறும். வருடந்தோறும் புரட்டாதிமாதச் சுக்கிலபக்ஷப் பிரதமை முதலாகிய ஒன்பதுதினங்களுமே இதற்குரிய விசேடகாலமாகும். இராக்காலம் பராசத்திக்குரியதெனச் சுருதி கூறுதலால் அத்தேவி பூஜையும் உபாச[illegible] இராக்காலத்திற் செய்தல் நன்றாம். மாணவரும் நூலாராய்ச்சி செய்யும் அறிவாளிகளும் ஆசிரியர்களும் நூல் பத்திரிகை முதலியவற்றை எழுதுவோரும் கணக்கெழுதுவோரும் பிறரும் இந்த நவராத்திரி விரதத்தை முறைப்படி அநுஷ்டித்தால் விசேட பயனை அடைவரென்று சாக்கேய தந்திரம் கூறும்.

இப்பராசத்தி பிரமதேவரிடத்தில் சிருட்டி சத்தியாகவும், விஷ்ணுமூர்த்தியிடம் திதி சத்தியாகவும், உருத்திரமூர்த்தியிடத்தில் சம்மார சத்தியாகவும் விளங்கிப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களுக்கும் ஆதாரசத்தியாம். இச்சத்தி நவராத்திரி எனப்படும் இத்தினங்களில் ஒன்பதுவித சொரூபமாகி ஆன்மகோடிகளுக்கருள் புரியும். இவற்றுள் முதன் மூன்று தினங்களிலும் துர்க்கையின் அம்சமாகவும், அடுத்த மூன்று தினங்களிலும் மகாலட்சுமி அம்சமாகவும், ஈற்றிலுள்ள மூன்றுதினங்களிலும் சரஸ்வதியின் அம்சமாகவும்கொண்டு நாம் வழிபடுதல் வேண்டும்.

இந்த ஒன்பது இரவும் தேவியை முறைப்படி பூசித்து உபாசித்து விரதங் காக்கும் சத்தியற்றோர் நவராத்திரி ஈற்றிலுள்ள எட்டாம் ஒன்பதாம் நாட்களிலேனும் ஆவசியகம் செய்தல் வேண்டும். ஒன்பதாம் நாட் செய்யப்படும் விசேடபூசை மஹாநவமிபூசை எனப்படும். இத்தினங்களில் படித்தல் வாசித்தல் எனப்படும் இவ்விரண்டும் செய்ய வொண்ணாவென நூல்கள் கூறும். புத்தகங்களை நன்கு அலங்கரித்துச் சரஸ்வதி தேவியின் திருவுருவத்தை அதில் ஸ்தாபித்துப் பூசித்தல் வேண்டும். இது சரஸ்வதி பூசை யென்றும் ஆயுதபூசையென்றுஞ்சொல்லப்படும். இந்த விசேட தினத்தில் ஒவ்வொருவரும் தத்தம் சீவனார்த்தத்துக்குரிய கருவிகளை விசேடமாகப் பூசித்தல் வேண்டுமென ஆன்றோர் கூறுவர்.

இந்த ஒன்பது தினங்களும் கழிந்த மறு தினமாகிய தசமிதிதி "விஜயதசமி" யெனப் பெயர்பெறும். இதுவே பராசத்தியானது பல்வேறு பின்னசத்திகளாக நின்று அசுர சம்மாரஞ் செய்து ஜெயமடைந்தபின் அகர முதலாக ஐம்பத்தோரட்சரங்களுடன் விளங்கும் மஹாசத்திபீடத்தில் எழுந்தருளிய தினமாகும். சூரிய அஸ்தமனகாலம் விஜய முகூர்த்த யோகமெனப்படும். அக்காலத்திற் செய்யப்படும் கருமங்கள் வெற்றிபெறுமெனச் சோதிடநூல் கூறும். விஜய தசமிலன்று வரும் விஜய முகூர்த்தத்தில் எவர்களும் தங்கருமம்ஜெயமடையவேண்டி உத்தரதிசைநோக்கிச் சிறிது தூரஞ் சென்று மீள்வர். இக்காலத்தில் இக்கருமங்கள் அலட்சியஞ் செய்யப்பட்டனவாயினும் அறிவுடையோர் பலர் இன்றும் செய்துவருவதைக் காணலாம்.

இச்சுபதினத்தில் எக்கருமமும் செய்யலாமென்பது பெரியோர் கொள்கை. வித்தியாரம்பஞ் செய்வதற்கு இத்தினம் சாலச் சிறந்ததாகும். அங்ஙனம் செய்வதால் வித்தை மேன்மேலும் ஓங்கி விருத்தியெய்துமென நூல்கள் கூறும். இச்சுபதினத்தில் சமீ விருக்ஷமெனப்படும் வன்னிமரத்தைப் பூசித்தல்வேண்டும். இது தன்னை வழிபடுவோருடைய பாவத்தைச் சமிக்கச்செய்யும் இயல்புடையதால் சமீ என்னும் பெயர் பெற்றது. பாண்டவர் ஐவரும் பாஞ்சாலியுடன் வேற்றுருப் பெற்று விராட நாட்டிலிருந்தபோது தமது ஆயுதங்களை வன்னிமரப் பொந்துள் வைத்து, நவராத்திரியின் மறுதினமாகிய 'விஜயதசமி'யிலன்று அவற்றைப் பெற்றுப் பூரண ஜெயமடைந்தனர். ஸ்ரீராமபிரானும் பிறரும் இங்ஙனமே ஜெயம் பெற்றனரென்பர்.

நவராத்திரி விரதம் பூர்வத்தில் அரசர்களினாலும் கற்றோர்களினாலும் விஷேமாக அநுட்டிக்கப்பெற்று வந்தது. பூர்வகாலத்து அரசர்கள் இவ்விரதத்தைவிசேஷமாக அநுட்டித்துத் தேவியைப் பூசித்துவருவர். அவர்கள் வித்துவான்களையும் பண்டிதர்களையும் புலவர்களையும் நாவலர்களையும் தங்கள் சபையில் அழைத்து அவர்கள் வாயிலாகப் பல அரிய விஷயங்களைக்கேட்டு அவர்கட்குத்தக்க சன்மானஞ் செய்துவித்தியாவிநோதத்திலேயே இப்பத்துநாட்களையும் கழிப்பர்.

ஆசிரியர்களாயு[illegible] தங்கள் மாணாக்கருடன் வித்தியாசாலை[illegible] நன்கு அலங்கரித்து கும்பஸ்தாபனஞ்செய்து வழிபடுவர். உபாத்தியாயர் தமது மாணாக்கரையும் அழைத்துக் கொண்டு அம்மாணாக்கரின் பெற்றோர்களுடைய வீடுகள் ஒவ்வொன்றுக்குஞ் சென்று அந்த வருடம் முழுவதும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் கற்ற கல்வித் திறமையைப் பெற்றோரும் அறிந்து மகிழும்படி செய்வர். பெற்றோர் தங்கள் வீட்டிற்கு வந்த ஆசிரியரையும் பிள்ளைகளையும் மனமகிழ்ச்சியோடு நன்குபசரித்து ஆசிரியருக்குத் தட்சணையும் உதவுவர். இக்காலத்தும் சைவவித்தியாசாலைகள்சிலவற்றில் இவ்வழக்கம் நடைபெற்றுவருகின்றது. வியாபாரார்த்தமாக வைத்து நடத்தப்படும் சைவவித்தியாசாலைகளில் இவை பெரிதும் அலட்சியஞ் செய்யப்படுகின்றன. வடஇந்தியாவிலுள்ள வங்காளம் முதலிய ஊர்களில் இந்நவராத்திரி "தசரா" என்று வழங்கப்படும். (தசம்-க0) அவ்வூர்களிலுள்ளார்க்குத் தசராப்போல் விசேஷ தினம் வேறொன்று மில்லையாம். இக்காலத்திலே வித்தியாசாலைகள் தொழிற்சாலைகள் அச்சியந்திரசாலைகள் முதலாம் காரியஸ்தலங்களிலே தொழில்கள் நிறுத்தப்படுகின்றன. "தசரா" அரசினராலும் விடுதலைநாளாக மதிக்கப்படுகின்றது. தேவவணக்கமும் கங்காதீர்த்த ஸ்நானமும் சுற்றமித்திரர்கள் கலந்துகொண்டாடுவதும் செய்யப்படுகின்றன. இக்காலத்திலே சிறியோர் பெரியோரையும், பிள்ளைகள் பெற்றோரையும், சீடர்கள் குருவையும், மாணாக்கர் ஆசிரியரையும் தரிசித்து வழிபடுமுறையே அவர்கள் இவர்களை ஆசீர்வதிப்பர். ஆங்கிலக் கல்வி அதிகரித்துள்ள வங்க நாட்டிலே இப்புராதன கொள்கைகள் மிக்க சிறப்புடன் நடப்ப யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இவை குறைவுற்று வருதற்குக் காரணம் ஆங்கிலக்கல்விவிருத்தியென்று சொல்லுதல் பொருந்தாது. நவீனநாகரிகமும் சமயாபிமானக் குறைவுமே இங்கு இவ்வாறான சற்கருமங்கள் அலட்சியஞ் செய்யப்படுதற்குக் காரணமாம்.

நமது யாழ்ப்பாணத்தின்கண்ணே வசிக்கும் சைவசமயிகள், நஞ் சமய சம்பந்தமான கொள்கைகளெல்லாம் சந்தேகவிபரீதமில்லா உண்மைஞானிகளாய் விளங்கிய முன்னோரால் வகுக்கப்பெற்றன வென்னும் உண்மையை உள்ளவாறு உணர்ந்து இச்சிவவிரதங்களையும் மற்றுஞ் சமயசம்பந்தமான கருமங்களையும் தவறாதுசெய்து ஈடேறுதல் வேண்டும்.

## யாழ்ப்பாண ப்பட்டின பரிபாலன சங்கம்.

பட்டின பரிபாலன சங்கத்தின்

எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக

### ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை

(மாமாத்தம்பி)யைத்

தயவுசெய்து

தெரிவு செய்யுங்கள்.

(Q. 66)

## ஏகாதசி விரத மகத்துவம்

"தேனுலவு மலர்தழைந் தோடையானை
மணந்து சந்தச் சினைப்பூஞ் சோலைக்
கானுலவு மியவனைக் கன்னியிளம்
பசும்பிடிமுன் களிப்பி வின்ற
கூனுலவு தவளமதிக் குழவியெனத்
திகழ மொற்றைக் கோட்டு மோட்டு
வானுலவு மழைமதக்கைம் மாமுகக்கன்
றினைத்துதித்து வணங்கல் செய்வாம்."

ஏகாதசிவிரதம் காவற் கடவுளாகிய விஷ்ணுமூர்த்தியைக் குறித்து அநுஷ்டிக்கப்படுவதாகும். ஏகாதசி சிவனுக்குரிய திதியாகவும் துவாதசி திருமாலுக்குரிய திதியாகவுமிருத்தலினாலும் இந்த இரண்டு திதியும் பொருந்தி வரும விரதமாக இது இருத்தலினாலும் வைஷ்ணவர்கள் மாத்திரமன்றிச் சைவர்களும் இவ்வேகாதசி விரதத்தைச் சிரத்தையோடு அநுஷ்டித்து வருவர். ஏகாதசி விரதம் நித்தியமெனவும் காமியமெனவும் இருவகைப்படும். இம்மைப் பயன்களை விரும்பாது முத்தியை விரும்பி யநுஷ்டிக்கப்படுவது நித்தியமாம். இம்மைப்பயன்களை விரும்பி அநுஷ்டிக்கப்படுவது காமியமாம்.

### விரத நிர்ணயம் முதலியன.

பன்னிரண்டு மாசங்களிலும் பூர்வபக்கத்தில் வரும் ஏகாதசித் திதிகளில் இவ்விரதம் அநுஷ்டிக்கப்படத்தக்கது. வானப்பிரஸ்தரும் சந்நியாசிகளும் அபரபக்கத்து ஏகாதசிகளையும் கொள்ளலாம். மகாவிஷ்ணுமூர்த்தி ஆடிமாசத்தில் அறிதுயிலமர்ந்து கார்த்திகை மாசத்தில் அத்துயில் நீங்கியருளுவர். இதனால் இந்த ஐந்துமாசங்களிலும் நிகழும் ஏகாதசிகள் விசேஷமானவையாம். இவற்றுள்ளும் கார்த்திகைமாசத்து வரும் ஏகாதசி விசேஷமுடையது. கார்த்திகை மாச ஏகாதசித்திதியை முதலாகக்கொண்டே இவ்விரதத்தை அநுஷ்டிக்கத் தொடங்குதல் வேண்டும். ஆனால், மார்கழிமாசப் பூர்வபக்க ஏகாதசியை முதலாகக் கொண்டே இக்காலத்தில் இவ்விரதம் அநுஷ்டிக்கப்பட்டுவருகின்றது. மாசிமாசத்து ஏகாதசியும் சிறந்ததாகும். புரட்டாசி மாசத்தில் ஏகாதசி துவாதசி என்னுந் திதிகள் திருவோண நட்சத்திரத்துடன் கூடி நிகழுமாயின் அது மிக விசேடமுடையதாகும். இங்ஙனம் நிகழ்வதை விஷ்ணு சிருங்கலையென்று சொல்வர்.

ஏகாதசிக்கு உதயவியாபகம் முக்கியமானது. முதனாள் அத்தராத்திரிக்கு முன் கூடி நிற்கும் ஏகாதசி ஒரு குற்றமுமற்றதாம். முதனாள் அத்தராத்திரிக்குத் தசமி நின்று அதன்பின் ஏகாதசி கூடுமாயின் அவ்வேகாதசிக்குத் தசமி வேதையென்னுந் தோஷமுண்டாம். அத தோஷம் கபாலவேதையெனப்படும். அது வைஷ்ணவர்களாயுள்ளாரால் சிலகாலத்து விலக்கப்படும். சூரியஉதயமுதல் முன்னே நான்கு நாழிகைகளுக்கிடையில் தசமி நின்று அதன்மேல் ஏகாதசி கூடுமாயின் அது தசமிவேதையாகும். இவ்வேதை தசமி வியாபிக்கும் நாழிகைகளுக்கேற்ப நால்வகைப்படும். [நாழிகைக்-குறைநிறைகள்] இந்நான்கு வேதைகளும் இவ்விரதத்திற்குக் குற்றமாகும். இவைகள் நான்கும் பொதுவிற் குற்றமாயினும் வைதிகர்க்கும் சைவர்க்கும் இறுதியில் நின்ற சூரியோதய வேதையே குற்றமாகும். வைஷ்ணவர்கட்கு நான்கு வேதைகளும் குற்றமேயாம். வேதைக்குற்றம் நேரும்போது, அடுத்தநாள் ஏகாதசியின் புச்சமிருந்தாலும் ஏகாதசி புச்சமில்லாதிருப்பத் துவாதசியேயிருந்தாலும் வைஷ்ணவர் அத்துவாதசித்தினத்தில் விரதம் அநுட்டித்தல்வேண்டும். (புச்சம்-பிற்பாகம்). வைதிகரும் சைவரும் உதயவேதையாயிருந்தாலும், ஏகாதசி துவாதசிகளின் புச்சமில்லையேல், ஏகாதசியிற்றானே அநுட்டித்தல் வேண்டும். உதயவேதையில்லாதபோதும், அவ்விருதிதிகளின் புச்சங்கள் இரு தினங்களிலுமிருப்பின் அடுத்த நாள் அநுட்டித்தல்வேண்டும். நால்வகை வேதைகளுமில்லாதபோதும், ஏகாதசி க0 நாடிக்குள் முடிந்து துவாதசி மாத்திரம் புச்சமாய் நின்றால், வைஷ்ணவர் துவாதசியில் அநுட்டித்து அடுத்த நாள் துவாதசி முடியுமுன் பாரணஞ் செய்தல்வேண்டும். ஏனையோர் ஏகாதசியில் அநுட்டிக்கலாகும். ஏகாதசி புச்சமாயிருப்ப, துவாதசி இரவில் அற்றால் வைதிகரும் சைவரும் வைஷ்ணவருட் போககாமிகளும் முதனாள் அநுட்டித்தல்வேண்டும். மோக்ஷகாமிகள் அடுத்த நாள் அநுட்டித்துத் திரயோதசியிற் பாரணஞ்செய்தல்வேண்டும்.

ஏகாதசி திரயமாக நிற்பின், உதயவேதையாயினும் வைதிகரும் சைவரும் கொள்ளலாகும். [திரயம்-மூன்றின் கூட்டம்.] துவாதசி விருத்தியாய்ச் சேடிப்பின் துவாதசியில் விரதம் அநுட்டிக்கலாம். துவாதசி திருவோணத்துடன் கூடிவரின் துவாதசித தினத்திலும் உபவாசமிருந்து திருமாலைப் பூசித்து திரயோதசியன்று காலை பாரணஞ்செய்தல்வேண்டும். வைஷ்ணவருட் பாலர் விருத்தரொழிந்த ஏனையோர் ஏகாதசியிற் போசனஞ் செய்யவொண்ணாது. நோய் முதலியன காரணமாக விரதம் அநுட்டிக்க இயலாதவர் மனைவிமக்கள் சகோதரர் பௌத்திரர்என்னும் இவர்களுள் ஒருவரையேனுங்கொண்டு விரதத்தை அநுட்டிப்பிக்கலாம். இன்றேற் பிராமணரைக்கொண்டு விரதம் அநுட்டிப்பித்து அவர்களுக்கு இயன்ற தக்ஷிணை கொடுத்தலும் ஆகும். கணவனின்பொருட்டு மனைவியும் குருவின்பொருட்டுச் சீடனும் அரசனின்பொருட்டுப் புரோகிதனும் இவ்விரதத்தை அநுட்டிக்கலாகும். சிராத்ததினத்திலே உபவாசம் விலக்கப்படுதலால் அத்தினத்துப் பிதிர்சிராத்தமும் நேருமேல் சிராத்தத்தை முடித்துப் பின் அன்னத்தைமுகர்ந்து விட்டு உபவாசமிருத்தல்வேண்டும்.

ஏகாதசிவிரததினத்திற்கு முதனாள் ஒருபொழுதுண்டு கோபம் முதலிய குற்றங்களகற்றி இரவில் நித்திரைசெய்து விடிய ஐந்து நாழிகைக்கு முன் நித்திரை விட்டெழுந்து நித்திய கருமங்களை முடித்துச் சங்கற்பஞ் செய்து அன்றிரவு நித்திரை செய்யாது நான்கு யாமங்களினும் மகாவிஷ்ணுமூர்த்தியைப் பூசித்தல்வேண்டும். அடுத்தநாட் காலையில் நித்தியகடன் முடித்துப் பிராமணர்க்குத் தானங்களைக் கொடுத்து, விஷ்ணுமூர்த்தியை விதிப்படி பூசித்து அடியாரோடும் சுற்றமித்திரரோடும் விதிக்கப்பட்ட காலத்துட் பாரணஞ் செய்தல்வேண்டும்.

முன்னொருகாலத்திலே புரூரவா என்னும் அரசன் மதிமயக்கத்தினால் துவாதசியில் எண்ணெயிட்டு முழுகிய தோஷத்தினால் புலிமுகத்தைப் பெற்றான். அவன் பின்னர்த் திருமாலைப் பலகாலம் பத்தியோடு பூசித்து அக்கடவுளினருளாற் புலிமுகம் நீங்கப்பெற்றுத் தொன்மை போலானான். ஆதலின் துவாதசிதினத்தில் அப்பியங்கனஞ் செய்யவொண்ணாது.

அம்பரீடன் என்னும் அரசன் ஏகாதசி விரதத்தை யநுட்டித்துத் துவாதசியிற் பாரணஞ் செய்யப்புகுஞ் சமையத்தில், அவ்வரசனுடைய விரதத்திற்குப் பங்கஞ் செய்யவெண்ணிய துருவாசமுனிவர் அரசனிடஞ் சென்று தமக்கு அமுதிடும்படி கேட்க அரசன் மிக்க மகிழ்ச்சியோடு அதற்கு உடன்பட்டான். துருவாசர் தாம் ஸ்நாநம் முடித்துவருவதாக அரசனுக்குச் சொல்லிச் சென்று ஒரு தடாகத்துள் அமிழ்ந்தி மறைந்திருந்தார். பாரணகாலந் தவறிவிடுமேயென்ற அச்சத்தினால் அரசன் துருவாசரைத் தேடி யழைத்து வரும்படி தன் ஏவலருட் பலரை ஏவினான். ஏவலர் அம்முனிவரை எங்குந் தேடியுங் கண்டிலர். துருவாசர் போசனஞ் செய்யாதிருப்பத் தான் செய்வது முறையன்றென நினைந்து அரசன் பாரண காலம் முடியுமுன் துளசியோடு கலந்த தீர்த்தத்தை யுண்டு முனிவர்வரவை எதிர்பார்த்திருந்தனன் காலந்தப்பியபின் முனிவர் வந்து "வேந்தனே, நீ வந்த விருந்தை அலட்சியஞ்செய்து போசனம் உண்டாய்" என்று சினந்து அரசனைச் சபித்தார். முனிவர் இட்ட சாபம் தவறுசெய்யாத அரசனிடத்திற் பலிக்கவில்லை. முனிவர் சபித்துப் புரோட்சித்த சலத்தினின்றும் ஓர் சக்கரந் தோன்றித் துருவாசமுனிவரைத் துரத்தது. முனிவர் அதற்கஞ்சி அரசனிடம் அடைக்கலம் புகுதலும் சக்கரம் முனிவரைவிட்டகன்றது. ஆதலால், பாரணகாலத்திற் பாரணஞ்செய்தற்கு யாதும் இடையூறு நேருமேல், அக்காலம் முடிவதற்குமுன் துளசியோடு கூடிய தீர்த்தத்தையேனும் உட்கொள்ளுதல்வேண்டும்.

(வரும்).

## மோட்டர்பஸ் கமருள் வீழ்ந்து நொருங்கியமை

பதினெட்டுப்பேர் காயப்பட்டனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மகோவுக்குச் சமீபமாயுள்ள தெருவிலே முப்பத்தைந்து பிரயாணிகளை ஏற்றிச்சென்ற மோட்டர்பஸ் ஒன்று வளைவு மூலையிலுள்ள கமர் ஒன்றினுள் வீழ்ந்து நொருங்கியது. பிரயாணிகள் பதினெட்டுப்பேர் காயப்பட்டனர். நால்வர் அதிக காயப்பட்டனர்.

## நான்கு ஒப்பந்தக்காரர்.

சிலாபத்திலே விஸ்திறிது, அல்பிறு, மார்தினு, றபேட் என்னும் நான்கு பேர் அங்குள்ள தென்னந்தோட்டம் ஒன்றிலிருந்து தேங்கா ஏற்றிச் செல்வதற்கு ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் அனுப்பினார்கள். தோட்ட முதலாளி றபேட் அனுப்பிய பத்திரத்தை பேற்றுக்கொண்டவர். இதனால் மனஸ்தாபமடைந்த ஏனைய மூவரும் றபேட்டை வழிமறித்துச் சருவி அவனிடம் இருந்த 42 ரூபாவையும் திருடினார்கள். வழக்கு நடைபெறுகின்றது.

## போத்தல் விளக்கினால் எரிந்து இறந்தமை.

சென்ற சனிக்கிழமை இரவு காவலப்பிட்டிக்குச் சமீபமான றல்கொலாத்தோட்டத்திலுள்ள ஞானம்மா என்னும் ஒரு பெண் போத்தல் விளக்கைப் பக்கத்தில் வைத்து நித்திரைசெய்தனள். நடுச்சாமத்திலே அப்பெண் தபுர்த்திபூர்வமாய்த் தனது கையினாற்றட்டி வீழ்த்தினபோது நெருப்புப் பற்றியது. அங்கு நித்திரையாயிருந்தோர் அவளது அபாயக்குரல் கேட்டுச் சென்றுபார்த்தபோது உடம்புமுழுவதும் எரிந்துகொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்பெண் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டுச் சிறிதுவேளையில் உயிர்துறந்தனள்.

## வாயைத் திறந்துகொண்டு மீன்பிடித்தவன்.

சென்றவியாழக்கிழமை கொஸ்கொடை என்னுமிடத்திலுள்ள சிங்கோ பேர்னண்டோ என்னும் ஒருவன் ஆற்றிலே மீன்பிடிக்கச் சென்று வாயைத் திறந்துகொண்டு தண்ணீருக்குட் சுழியோடினான். அப்பொழுது ஒருமீன் அவனுடையவாய்க்குட் புகுந்து தொண்டையுட் சிக்கிக்கொண்டது. அவன் உடனே பலப்பிட்டி வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டான். வைத்தியசாலையிற்செய்யப்பட்ட சிகிச்சைகளெல்லாம் வீணாயின. ஈற்றில் அந்த மீனை அவனுடைய வயிற்றினுட் புகுத்தி ஒளஷதப் பிரயோகஞ் செய்யப்பட்டது. இப்பொழுது அவன் சுகமடைந்து வருகிறான்.

## மட்டக்களப்பில் மழையின்மை.

மட்டக்களப்பிலே அதிககாலமாக மழையில்லாமையினால் வெப்பம் அதிகரித்திருக்கின்றது. சென்ற சிலநாட்களாகப் பின்னிரவில் அதிக பனிப்பெய்தது. அங்குள்ள குளங் கிணறுகளிலுள்ள தண்ணீர் அதிகமாக வற்றுகின்றது. பயிர்கள் வாடுகின்றன. மழை இன்னமும் காலந்தாழ்க்குமாயின் சிறுபோக நெற்பயிர்கள் அழிந்துபோகும். சென்றவாரம் உக்கிரமான புயல் அடித்தது. அரிசிவிலை தினந்தோறும் ஏறுகின்றது. சின்னமுத்து பொக்குளிப்பான் காட்டுக்காய்ச்சல் முதலான நோய்கள் அதிகமாகப் பரவுகின்றன. அங்குள்ளார் மழைவேண்டி ஆலயங்களில் விசேஷ பூசை முதலியனவற்றைச் செய்கின்றனர்.

## துஷ்டர் வீடு கொழுத்தியமை.

பெய்யகலைக்குச் சமீபமாயுள்ள பொத்தாவிலா என்னுமிடத்திலே பொடிசின்னோ, ஜேம்ஸ் அப்பு, பாறன் முதலான துஷ்டர்கள் சிலர் ஒருவரோடொருவர் ஒற்றுமையுடையவர்களாய் அந்த இடத்திலும் அயலிடங்களிலும் சிலகாலமாக அக்கிரமம்புரிந்துவந்தார்கள். இவர்கள் இடையிடையே சிறைக்குச் சென்று திரும்பும் வழக்கமுடையர். பொடிசின்னோ என்பவன் அங்குள்ள ஒரு பெண்ணைத் தனதாக்கமுயன்றான். ஏனைய துஷ்டர்கள், தாங்களும உரிமை பாராட்டத் தொடங்கினார்கள். இதனால் அவர்களுக்கிடையில் அதிக மனஸ்தாபமுண்டாயது; எல்லோரும் ஒற்றுமையின்றி வெவ்வேறாகப்பிரிந்தார்கள். ஜேம்ஸ் அப்புவும், பாறன் என்பவனும் குறித்த பொடிசின்னோவுக்கு இடர் விளைக்க நினைத்துச் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு அவனுடைய வீட்டிற் றீமூட்டினார்கள். வீடு எரிந்து சாம்பராயது. எதிரிகள் பிடிக்கப்பட்டுச் சனுக்குறைப் பொலிஸ் நீதிபதி முன் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றனர்.

## உக்கிரமான வெடிகுண்டு விபத்து

மூவர் இறந்தனர்.

பன்னிரண்டு பேர் காயப்பட்டனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை சிம்லாவைச் சேர்ந்த கெய்துபொலிஸ் தானத்திலே உக்கிரமான வெடிகுண்டுவிபத்து நேர்ந்தது. பன்னிரண்டுபேர் காயப்பட்டனர். ஒரு வாலிபன் உடனே மாண்டனன் காயப்பட்டோர் வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டார்கள். அங்கும் இருவர் மாண்டனர். வேறுமிருவர் ஆபத்தான நிலையிலிருக்கின்றனர். குண்டெறிந்தவர்கள் ஒருவரும் இன்னும் அகப்பட்டிலர்.

## 1837 தங்கப்பவுணை அபகரித்த ஆங்கில நபாற்கந்தோரதிபர்.

ஹென்றி வில்லியம் ரைறல் என்னும் ஆங்கிலர் ஒருவர் 1837 தங்கப்பவுணை அபகரித்துக்கொண்டு சுகசீவியம் நடாத்தும்படி அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் மார்க்கத்திலே கொழும்புத் துறைமுகத்திற் பிடிக்கப்பட்ட சமாசாரத்தைச் சென்றவாரம் வெளியிட்டுள்ளோம். இந்த ஆங்கிலேயர் சென்ற சனிக்கிழமை துறைமுகப் பொலீசாரற் கொழும்புப் பொலிஸ் கோட்டுக்குக் கொண்டு போகப்பட்டார். பணத்தை அபகரித்து மறைந்தோடிய ரைறல் என்பவரைத் தம்வசம் ஒப்புவிக்க வேண்டுமென்றும், இந்த விஷயத்திற் சம்பந்தமான எழுத்துப் பிரதிகளை அதிசீக்கிரத்தில் அனுப்பிவைப்பதாகவும் குடியேற்றநாட்டு மந்திரி அனுப்பிய தந்திச் சமாசாரத்தைப் பொலீசர் கொழும்புப் பொலிஸ் நீதிபதிக்குக் காட்டினர். நீதிபதி வருகிறசனிக்கிழமை தவணை குறித்த பின் எதிரியைப் பிணையில் விட்டனர்.

## வெறிகொண்ட படுமரம்

சிறுவன் தொட்டிலிற்குழந்தையைக் காத்தமை.

சென்ற ஞாயிற்றுக்கிழமை தேல்தேனியா என்னுமிடத்திலே அப்புகாமி என்னும் ஒரு குடிகாரன் அதிகமாகக் குடித்தபின் வீட்டுக்குப்போய்த் தொட்டிலினுள் நித்திரையாய்க் கிடக்கும் தன் சிறுகுழந்தையைக் கொல்வதாகப்பயமுறுத்தி அதனைக்காலாலிடற முயன்றான். அப்பொழுது குழந்தையின் தாய் அதனைக்காப்பாற்றும் பொருட்டுத் தன் புருஷனைத் தடைப்படுத்தச் சென்றனள். அப்புகாமி அப்பெண்ணைக் கீழே தள்ளி வீழ்த்தி அடித்தபின் தொட்டிலின் பக்கத்துக்குச் சென்றான். குடிகாரனும்மனைவியும் கலகமிடும் சத்தங்கேட்டு அவனுடைய மகனாகிய பதினான்குவயதுச் சிறுவன் ஒருவன் அங்குச் சென்று (அப்பாதகன் பிள்ளையைக் காலால் இடறப்புகும் தருணத்தில்) ஓர் மண்வெட்டியினால் அவனது தலையில் மோதினான். அப்புகாமி கடுங்காயத்துடன் அறிவிழந்து பூமியில் வீழ்ந்தான். குழந்தை உயிர்பிழைத்தது. குடிகாரன் தெல்தேனியா வைத்தியசாலையிற் கிடக்கின்றனன். பொலிஸ்நீதிபதி அவனிடம்மரண வாக்குமூலம் கேட்டனர்.

## விளம்பரம்கேள்விப்பத்திரமானமை.

கிராமவாசியின் திகில்.

யாத்தளையிலே பட்டினபரிபாலன சங்கத்தின் அங்கத்தவராக வருதற்கு விரும்பிய பலர் தத்தம் வட்டாரங்களிலே தீவிரமாக முயன்றும் துண்டுப்பத்திரங்களைப் பரப்பியும் வருகின்றார்கள். அங்குள்ள பிறக்ரர் ஒருவர் தான் இருக்கும் வட்டாரத்துக்கு அங்கத்தவராக விரும்பித் துண்டுப்பத்திரம் வெளியிட்டார். அப்பத்திரத்தில் ஒன்று ஆங்கிலந்தெரியாத ஒருகிராமவாசியின் கையில் அகப்பட்டது. கிராமவாசி அதனைக்கண்டு அஞ்சி நடுக்கமுற்று அதில் எழுதப்பட்ட வாக்கியங்களை உணரமாட்டாதவனாய் எதிரேவந்த ஒருவருக்குக்காட்டினன். அவன் "இதனை ஓர் பிறக்ரர் உனக்கனுப்பியிருக்கின்றார்" என்று கூறிச்சென்றான். கிராமவாசி பின்னரும் அதிகதிகிலடைந்தவனாய்ச் சமீபத்திலவசிக்கும்வேறொருபிறக்ரரிடம்சென்று "ஐயா நான் இந்த ஊரில் ஒருவருக்கும் கடன் காரனல்லன். அப்படியிருக்க ஒரு பிறக்ரர் எனக்குக் கேள்விப்பத்திரம் விடுத்திருக்கின்றார்" என்று தடுமாற்றத்துடன் கூறி அப்பத்திரத்தைக் கொடுத்தான். பிறக்ரர் அதனைப்பார்த்து கிராமவாசியின் அறியாமையைவிட்டுப் பச்சாத்தாபப்பட்டு அதனுண்மையை அவனுக்கு விளக்கிக்கூறி அவனைத் திருப்திப்படுத்தி அனுப்பினர்.

## எமது புதியதேசாதிபதியும் கௌரவ மிஸ்டர் விக்ரர் கொறியாவும்.

உபசாரப்பத்திரம் வாசிக்கவோண்ணுதாம்.

சென்றவாரம் சட்டநிரூபணசபையிலே அரசிறைப் பகுதியாருடைய கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் எமது புதிய தேசாதிபதியாகிய சேர் ஹியூஸ் கிளிவோட் அவர்கள் இங்கு வரும்பொழுது அவருக்கு ஓர்உபசாரப்பத்திரம் வாசித்தலைப்பற்றி யோசனை செய்யப்பட்டது. பின், அவ்விஷயம் எல்லா அங்கத்தவர்களும் கூடியுள்ளசபையிற் பேசப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அன்று நிகழ்ந்தகூட்டத்துக்குக் கௌரவ மிஸ்டர் கொறியா அவர்கள் சமுகமாகவில்லை. நெருங்கிய உறவினர் ஒருவரது சுகவீனங் காரணமாகத் தாம் அன்று சமுகமாதல் கூடவில்லையென்றும், சேர் ஹியூஸ் கிளிவோட் அவர்கள் முன் இங்கிருந்து சென்றபோது, அவரைக் கனம்பண்ணும்பொருட்டுப் பிரியாவிடைக் கூட்டம் நிகழ்ந்தவொன்றெனத் அக்காலிற் கூடியபகிரங்கக் கூட்டம்தீர்மானித்துள்ள நிர்ணயத்தைக் குறிப்பிட்டு அவர் இங்கு வரும் இச்சந்தர்ப்பத்திலும் அவருக்கு உபசாரப் பத்திரம் வாசிக்கக்கூடாதென்றும் மிஸ்டர் கொறியா ஓர் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

## தீபாவலி அறிக்கை.

"சூரிய சித்தாந்தம், அமரகோசம், காலமாதவம், பாணினி, சூத்திரம் இவைகளில் பௌர்ணமியின் அந்தத்திலுள்ள நக்ஷத்திரப் பெயரே மாதப்பெயர் என்று கூறப்படுகின்றது. சூரிய சித்தாந்தத்தினால் ஆஸ்வயுஜமாதப் பௌர்ணமி திதி ரேவதி, அசுவினி, பரணி இவற்றுள் ஏதேனும் ஒரு நக்ஷத்திர சம்பந்தமாய் வருதல் வேண்டுமென்று அறியப்படுகின்றது. இக்குரோதனவூ புரட்டாதிமீ"த்தில் வரும் பௌர்ணமி திதி முடிவில் இந்த மூன்று நக்ஷத்திரங்களுள் ஏதேனும் ஒன்றில் சம்பந்தப்படவில்லை. உத்திரட்டாதி சம்பந்தமாகவருவதால் பாத்திரபதமாதமேயாகும். உண்மை இப்படி இருக்க புரட்டாதிமாதத்தில் தீபாவலி நிர்ணயம் செய்தது அசாஸ்திரியமேயாகும். ஐப்பசிமாதப் பௌர்ணமி முடிவில் பரணி நக்ஷத்திர சம்பந்தமாதலால் அதுவே ஆஸ்வயுஜமாதமெனப்படும். சரஜோதி மாலையில் 'இரவிநல் துலைசேர்மாதம்' எனக் கூறப்பட்டிருப்பதைக் கொண்டும், புரட்டாதி மாதப் பௌர்ணமிக்கு ஆஸ்வயுஜமாதத்திற்குரிய நக்ஷத்திர சம்பந்தம் இல்லாமை நோக்கியும் சுருமசிரத்தையுடைய ஆஸ்திகச் செல்வர்கள் குரோதனவூ ஐப்பசிமீ 29உ சனிவாரம் இரவு விடியற்காலம் நரகசதுர்த்தசி ஸ்நானஞ் செய்தல் வேண்டும். இதில் ஆசங்கை கொள்வோர் புரட்டாதிமாத பௌர்ணமிக்கு ஆஸ்வயுஜ சம்பந்தமில்லாமல் ஆஸ்வயுஜமெனக் கொண்டதற்குரிய உண்மைகளை விளக்கி வரைவார்களாக" என்றுசோதிடகலாநிதி கூறுகின்றது.

## அரசாங்கமும் அதன் அவசியமும்.

ஜனங்களின் பொது நன்மைக்கான காரியங்களில் சிலவற்றை தாமே நடத்தியும் பிறரைக் கொண்டு நடத்துவித்தும் வருகின்ற உத்தியோகத்தர்கள் கூட்டமாகிய அமைப்பிற்கு அரசாங்கமென்று பெயர். இந்த அமைப்பானது பொது ஜனங்களினாலேயே ஏற்படுத்தப்பட்டது. அல்லது அது ஏற்படுவதற்குப் பொது ஜனங்கள் தமது சம்மதத்தைத் தந்தார்கள் என்று கூறலாம். இப்படி இந்த அமைப்பை ஜனங்கள் ஒத்துக்கொள்வதற்குக் காரணம் என்னவெனில் பொது நன்மைக்குவேண்டிய காரியங்கள் சிலவற்றை ஜனங்கள் பொறுப்பிலேயே விட்டு விட்டிருந்தால், தனித்தனியாய் அவர்களதை நன்முய்ச் செய்ய முடியாதென்பதும் ஒருக்கால் அதைசெய்ய முடியாமல் விட்டுவிடக் கூடும் என்பதுமேயாகும். இக்காரியங்கள் அவசியம் செய்ய வேண்டுமாதலாலும் எல்லா ஜனங்களும் இதைத் தாமே கவனிக்க முடியாததாலும் தங்களுக்குள் ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதில் சில உத்தியோகத்தர்களை நியமித்து அவர்களுக்கு மேற்சொன்ன காரியங்களை நடத்த உரிமையும் தருகிறார்கள். இப்படியே நடைபெறுதல் தான் அரசாங்கமெனப்படும். இவ்வாறு ஜனங்கள் தங்கள் பொது நன்மையின் பொருட்டுத் தங்களுக்குள் ஒரு அமைப்பை உண்டாக்கி அதன்வழி தங்கள் கூட்டத்திற் கெல்லாம் சட்டதிட்டங்களை ஏற்படுத்தவும் அவைகளை மீறினபோது தங்களைத் தண்டிக்கவும் பகைவர்களிலிருந்து தங்களைப் பாதுகாக்கவும் தங்களில் சிலருக்கு அதிகாரம் கொடுக்கிறார்கள். இப்படி யேற்படுவதற்கு 'ஸ்டேட்' என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். எனவே ஸ்டேட் ஜன சமுகம் அரசாங்க அமைப்பு என்பதுபொருள் ஸ்டேட் என்பதற்கு அவசியமான அங்கங்கள் 1 ஜனங்கள், 2 பொது நாடு, 3 அரசாங்கம், 4 சுதந்தரம் எனநான்காகும். மற்றொன்று அதாவது ஸ்டேட்டிற்கு சண்டை சமாதானம் வரிவசூல் முதலியசெய்ய சுதந்திரங்கள் உள்ளதுதான் ஸ்டேட்டிற்குட்பட்ட நாடாகும். உதாரணமாக இங்கிலாந்து ஒரு ஸ்டேட். இந்தியா ஓர் ஸ்டேட் அல்ல ஸ்டேட் ஒன்றுக்குத்தான் தனது நாட்டிலுள்ள எல்லாப் பொருள்களின்மீதும் மக்களின் மீதும் அதிகாரமுண்டு; அதாவது அதன் கட்டளைகள் எல்லாரையும் கட்டுப்படுத்தும். தனது சட்டங்களை மீறுகிறவர்கள் சொத்தையும் உயிரையும் கூடப் பறிமுதல் செய்யக் கூடும். இப்படியெல்லாமியற்ற அது ஓர் அதிகாரமும் சக்தியும் போன்றது, இவ்வாறு சட்டப்படி ஸ்டேட்டின் அதிகாரத்திற்கு ஓர் எல்லை இல்லை. இப்படிச் சொல்லுவதால் அரசாங்கத்தார் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று ஏற்படாது. அரசாங்கத்திலுள்ள காரியஸ்தர்களின் அதிகாரமெல்லாம் ஜனங்கள் கொடுத்ததேயாகும். அரசனுக்கும் அதிகாரம் குடிகளிடமிருந்து தான் வந்தது. இதை அரசாங்கத்தார் மறந்து கொடுமை செய்யாதிருக்கும் பொருட்டு நாகரிகம் மிகுந்த நாடுகளில் அவர்களின் அதிகாரத்திற்கு சில வரம்புகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. சில முக்கிய விஷயங்களில் அரசாங்கத்தார் ஜனங்களின் பிரதிநிதிகளை யோசித்து சம்மதத்தைப் பெற்றே காரியங்களை நடத்தவேண்டும். உதாரணமாக வரிவசூல் செய்தால் அதைச்செலவிடல் சண்டை, சமாதானம் சட்டமாறுதல் புதிய சட்டம் அமைத்தல் இவற்றையெல்லாம் இங்கிலாந்தின் மந்திரிகள் பார்லிமெண்டின் உத்தரவின் மேலேயே செய்வதை உற்று நோக்குக. இனி அரசாங்கத்தின் கடமைகளைப்பற்றி அறைகுவாம். அரசாங்கத்தார் தம்மாற்கூடியவரையில் ஜனங்களின் சுதந்தரத்தைக் குறைக்காதிருக்க வேண்டுமென்பது முதற்கடமையாகும். தேசத்தில் சமாதானம் நிலைப்பதற்கு எம்மட்டில் அவசியமாக அரசாங்கத்தார்தலையிடுதல் முறையோ அம்மட்டில், தலையிடுதல் அதாவது ஜனங்களின் சொத்தையும் உயிரையும் பாதுகாப்பதையே முக்கிய கடமையாகக் கொண்டுநிற்றல், பொது நன்மைக்காக ஜனங்கள் தனித்தனி செய்து கொள்ள முடியாத அநேக ஏற்பாடுகளை செய்ய வேண்டுவது; ஜனங்களுக்குள் செல்வ விருத்தியும் சகோதரபாவமும் நல்லொழுக்கமும் மேன்மேலும் பெருகுவதற்கு ஆதாரமாய் நிற்பது ஆகிய சீரியமுறைகள் அரசாங்கத்தின் உயர்ந்த கடமைகளாகும். அற்பவிஷயங்களில் அரசாங்கம் தலையிடலாகாது. அங்ஙனம் தலையிட்டால் ஜனசமுகத்தினிடை வெறுப்புத்தோன்றும் ஜனங்களின் சுதந்தரமும் முறையும் கம் அரசாங்கத்தால் தற்போது நமக்குக்கிடைத்துள்ள நன்மைகளும்மிகச்சிறந்தனவாயிருக்கின்றன. அதாவது தந்தி, தபால், கல்வி அபிவிருத்தி முதலியவைகள். இனி அரசாங்கம் இல்லாவிடில் என்ன சம்பவிக்குமென்பதைஇயம்புவாம். தக்க ஆட்சியவின்றேல் ஜன சமுகத்தில் கட்சி தோன்றி அதனால் பெருநஷ்டம் உலகிற்கு ஏற்படும். பணமும் பலமும் மிகுந்த சிலர் தங்கள் சுயநலத்திற்காக பொது நன்மையைக் குறைத்து விடுவார்கள்; உதாரணமாக, எஜமானர் கூலியாட்களைப்படுத்தும் பாட்டைக் கவனிக்க வலியர் எளியாரைக் கொடுமை செய்வார்கள். உலகில் அமைதியென்பது எட்டுணையுமிராது. களவும் கொலைகளும் மிகுந்து வரம்புகடந்து வளர்ந்தோங்கத் தலைப்பட்டுவிடும். இவைகளையெல்லாம் உற்று நோக்கில் அரசாங்கம் நமக்கு அவசியமென்பது தெற்றென விளங்குகிறது மேலும் பிறரால் ஜனங்களுக்குத் துன்பம்வராமல் அநேக சட்டதிட்டங்களை ஏற்படுத்தி நம்மை அரசாங்கம் ஆள்கின்றது. எண்ணிறந்த உத்தியோகஸ்தர்களும் பல நியாயஸ்தலங்களும் பேராபத்துக்களிலிருந்து காப்பதின் பொருட்டுப்பல ராணுவவீரர்களும் பொதுமக்களுக்கென நியமிக்கப்படிருக்கின்றன. சொத்துப்பாத்தியதையைக்காப்பாற்றுதல் அவனவன் சொத்தைப்பரம்பரையாய் வரம்புக்குட்படுத்திப்பாது காத்துக்கொள்ளுதல் ஆகிய இவைகளுக்கும் அரசாங்கம் உதவி புரிகின்றது. இனி அரசாங்கத்திற்கும் கல்விக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்குவாம். முற்காலத்தில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்தல் பெற்றோர்களின் கடமையாக மாத்திரம் இருந்து வந்தது. அரசாங்கத்திற்கு அதில் அக்கறை அதிகமில்லையென்று கருதப்பட்டும் வந்து சில நாடுகளில் சார்ச்சுகளில் கிறிஸ்தவர்கள் பாதிரியர்களைக்கொண்டு கற்றுக்கொடுத்து வந்தார்கள். பிறகு இக்காலத்திலோ நாட்டிலுள்ளபேர்களையெல்லாம் கற்றவர்களாகச் செய்தல் அரசாங்கத்தார் கடமையென்று எல்லாரும் ஒத்துக்கொண்டார்கள். மற்றும் அரசாங்க உரிமைகள் சிலரிடத்தில் மாத்திரம் தங்காமல் பொது ஜனங்களிட மிருக்கவேண்டுமென்றும் கொள்கையானது இப்போது நாடெங்கும் காட்டுத்தீப்போல் பரவுகின்றது. இப்படிப் பொதுஜனங்கள் நிறைவாய் அரசாங்கத்தை உபயோகப்படுத்த வேண்டுமானால் அவர்களுக்குக் கல்வி அத்தியாவசியமானது. இவ்வுண்மையையுணர்ந்து தான் ஏரக்குறைய

எல்லாத்தேசங்களிலும்குடிகளெல்லாம் எழுத்துவாசனையுள்ளவர்களாகச் செய்யப் பலமான முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆரம்பப் படிப்பு கட்டாய இலவசப்படிப்பாக சிறுவர் சிறுமிகளுக்குக் கற்பிக்கவேண்டும். மேலும் கல்வி விருத்திக்காக புஸ்தகசாலை, பொருட்சாலை முதலியவைகளையும் இதர ஒத்தாசைவகையில் தெரு, பாலங்கட்டுதல், வாய்க்கால் வெட்டுதல், ஏரி, மதகு, விளக்குக்கூண்டு (கலக்கரை விளக்கம்) துறைமுகங்கள் தந்தி தபால் டெலிபோன் முதலியவைகளையும் அபிவிருத்தி செய்து பொதுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக ஜனங்களுக்குள் நீதி, நல்லொழுக்கம், அன்பு தெய்வ விச்சயம் ஆகிய சிறந்த தன்மைகளை நேர்முறையிலும் பிறவழிகளிலும் பரவச்செய்வதற்கு வேண்டிய உபாயங்களை எல்லாம் அரசாங்கம் அனுசரிக்கவேண்டும். இத்தகைய பொறுப்பான பொது விஷயங்களை மக்கள் தாங்களே செய்து முடித்துக்கொள்ள வியலுமா? மண், பெண், பொன்னாசை ஆகியவைகள் மிகப்பெருத்துள்ள இந்நாளில் அரசாங்கம் இன்றியமையாததா யிருக்கிறது. இத்தகைய அரசாங்கம் குற்றவாளிகளைத் தண்டித்தல் என்னும் அளவில் நில்லாது ஜனங்களின் கல்வி, அறிவு, ஒழுக்கம், அன்பு, ஆற்றல், இன்பம் இவைகளையெல்லாம் மேன்மேலும் வளர்ப்பதற்கு ஏற்ற வழிகளையெல்லாம் அனுசரிப்பது தனது கடமையும் நோக்கமும் எனக்கொள்ளுதல் வேண்டும். இந்துநேசன்.

## மகாத்மா காந்தியும் கிறிஸ்தமதப் பாதிரிமாரும்.

(கல்கத்தாவில் இற்றைக்குச் சில நாட்களுக்கு முன்னே மகாத்மா காந்தியடிகளால் கிறிஸ்தமத பாதிரிமார் கூட்டத்தில் செய்யப்பட்ட ஓர் உபந்நியாசத்தின் சில பாகங்களின் தமொழிபெயர்ப்பு):—

"நான் சிறு பையனுச், சென்ற 1889-ம் ஆண்டு வரையில் லண்டன் மாநகரிலிருந்த காலம் தொடக்கமாக எனக்குத் தற்காலத்துக் காணப்படும் போலிக் கிறிஸ்தவரல்லாத உண்மைக் கிறிஸ்தவ மகான்களினது சகவாசம் உண்டென்பதையும், அந்தச் சகவாசமானது காலகதியில் அதிகரித்துவந்ததையும் உங்களிற் பலர் அறியாதிருக்கக்கூடும். நான் தென் ஆபிரிக்காவிலே யாராலும் விரும்பப்படக்கூடாததாகிய நிலைபரத்திலிருந்து சஞ்சரித்த காலத்தும் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்களின் நட்பு எனக்குண்டாயது. அக்காலத்து நண்பருள், தென் ஆபிரிக்க மிஷனின் தலைவராகிய கனம் ஸ்பென்சர் உவாற்றன் என்பவருடனும், பின்னர் மாட்சிமை தங்கிய போதகாசிரியர் முறேயுடனும், இன்னும் பலருடனும் விசேஷமாக நண்பு பூண்டிருந்தேன்.

ஆகையினாலே அனேகமாகக் கிறிஸ்தவ மிஷனரிமார்கள் கூடியிருக்கின்ற இச்சபையில் யானிருத்தல் ஓர் அதிசயமாகாது இன்னும், என் சீவிய காலத்திலொரு முறை எனது உற்ற சிநேகிதராகிய ஓர் கிறிஸ்தவ நண்பர் என்னைக் குறித்துச் சில நோக்கங்கள் கொண்டிருந்தார். நான் மிகவும் நல்லவனாய் அவருக்குத் தோற்றியபடியால் நான் ஒரு கிறிஸ்தவராகவிருக்கவேண்டுமென்பது அவரது அபிப்பிராயம். ஆனால் தன் எண்ணம் அநுகூலப்படவில்லையே யென வருந்திய அவர் மீது அனுதாபமுறுகின்றேன். தென்னாபிரிக்காவிலிருக்கும் ஓர் கிறிஸ்தவ மிஷனரி நண்பர் எனக்கு இடையிடையே கடிதமெழுதுவதுண்டு. 'அன்புடையீர் உமது சுகமெப்படி' யென அவர் பலமுறையிலும் வினவிவருகின்றார். ஆனால் நானதிந்தவளவில் எனது காரியமெல்லாம் சுபமாகவே வருகின்றன என எப்பொழுதும் அவருக்கு யான் பதிலளித்து வருகின்றேன். நான் அப்பரம் பொருளின் வழிபாட்டையுடையவனாக இருக்கவேண்டுமென்பதே இவர் போன்ற எனது நண்பரின் கோரிக்கையாயிருப்பின், நான் அவர்களுக்கு, சதா எனக்குள் மறைந்திருக்கின்ற அந்த இருதயமானது உண்மை வழியைக் கடைப்பிடித்து ஒழுகும் வண்ணம் நல்லறிவையும், வேண்டிய புத்தியையும், திடசாத்திரசித்தத்தையும், அடியேனுக்குக் கொடுக்கும்படி எல்லாம் வல்ல இறைவனையே நோக்கி இரந்துநிற்கின்றனென, உறுதியாகச் சொல்வேன்

எனது கிறிஸ்தவ நண்பருட் சிலரின் வேண்டுகோளின்படி இந்திய கிறிஸ்தவருள் மிகவும் மேம்பட்டவராகிய இறந்துபோன கலிநூர் பனர்ச்சி என்னும் மகானைத்தரிசிக்கும்படி ஒரு முறை சென்றிருந்தேன். நான் உண்மையாகவே சமய விஷயத்தில் நன்னெறியைத் தேடிக்கொள்வதில் என்னால் வேண்டிய முயற்சிகள் செய்தே வந்தேன் என்பதை வற்புறுத்தும் வண்ணமே இக்கதையைச் சொல்லப் புகுந்தேன். பனர்ச்சியிடம் நான் போகும்போது என்னுடைய மனமானது யாதேனுமோர் அபிப்பிராயத்தின் பாற்பட்டதாயிராது எதையறிந்தாலும் அதையெல்லாம் அங்கீகரித்துச்சிந்திக்கும் நிலையிலிருக்கும்படியாகச் செய்துகொண்டேன். நான் அவனுடன் சம்பாஷிக்கும்படியான சலாக்கியங்களுடையவராகவே அவரும் காணப்பட்டார். பனர்ச்சிக்கும் எனக்குமிடையே பல காரியங்களொத்திருந்தமையைத் தெற்றெனக்கண்டேன். அவருடைய வேடிக்கையில்லாவாழ்வும், தாழ்மையான குணமும், திடசித்தமும், உண்மைச் சுபாபமும், இவையெல்லாம் யான் மெச்சிப்பிரமிக்கக் கூடிய குணங்களாயேயிருந்தன. நான் அவரைச் சந்திக்கும்போது அவருடைய மனையாள் மிகவும் ஆபத்தானநோயினால் பீடிக்கப்பட்டுப் படுக்கையிலிருக்கும்சமையமாகவிருந்தது. இதனிலும் பார்க்கமனத்தைக் கரைக்கூடிய ஓர் பரிதாபநிலை வேறுண்டென எனக்குத்தோன்றவில்லை. நான் பனர்ச்சியைக்கண்டதும் அவருக்குச் சொன்னதாவது, (இது கடந்தகாலம் 1901-ம் ஆண்டென அறிகிறேனாக) உண்மை வழியைத்தேடுவோனாக உம்மிடம் வந்திருக்கின்றேன். என் அன்புடைக்கிறிஸ்தவ நண்பர்கள் பலரின் வேண்டுகோட்கிணங்கி, உண்மைநெறியையறிந்துகொள்வதற்கு வேண்டிய முயற்சியெல்லாம் செய்யப்பின்னிற்கேனென அவர்களுக்குக் கூறியவாக்கும் பிறழாது, உங்களைச் சந்திக்கநேர்ந்தது. என்னுடைய சிநேகிதர்க்குச் சொல்லியவண்ணம், நான் இறைவனது உண்மையறிவைப் பெறக்கூடிய வழியெதுவெனக்கண்டேனே அதன்வழியே செல்வதற்கு உலகத்திலுள்ள எந்தவித இன்பமும் என்னைத் தடுக்காதெனவும் அவருக்குக்கூறினேன் அவருடன் இப்படியாகச் சிறிதுநேரம் பேசியவிஷயங்களையெல்லாம் இப்போ திரும்பவும் உங்களுக்குச் சொல்ல யான் வரவில்லை. ஆனால் ஒரு காரியம் நீங்களறியவேண்டும். அந்தச் சம்பாஷணையானது மிகவும் உசிதமாகவும், மனக்கிளர்ச்சியைக் கொடுத்ததாகவுமிருந்தது. மன்றி நான் திரும்பும்போது அதைக்குறித்துயாதேனும் வியாகூலம் என்மனதிற் தோன்றவில்லை பின்னர் என்மனதில்தோன்றிய ஓர் துக்கமான அதிசயம்யாதெனில், பனர்ச்சிமகான்தானும் எனக்குக் கிறிஸ்தவமார்க்கத்தில் நம்பிக்கை வரும்படியாகச்செய்ய இயலாமற்போயிற்றே யென்பதுதான். இதுதான், நான் உங்கள் சமயத்தைப் பற்றிப் பின்பற்றும் நோக்கமாகச் செய்த கடைசிப்பிரயத்தனம். கிறிஸ்த சமயம், எனக்குப்போதிக்கப்பட்ட வண்ணமாக யான் ஏற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கவில்லை. இன்றைக்கு என் நிலையை நீங்களறியவிரும்புவீரேல், அந்நிலையை நான் மிகவும் விசயத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. கிறிஸ்தமதக் கொள்கைகளுட்பல யான் மெச்சத்தக்கனவாயிருப்பினும், தற்காலம் காணப்படுகின்ற குறுகிய கிறிஸ்தவ சமயத்தை யான் சார்ந்திருக்கமாட்டேன். நான்மிகவும் தாழ்மையுடன் உங்களுக்கு என் அபிப்பிராயத்தைக் கூற நீங்கள் எனக்கு விடைகொடுக்கவேண்டும் சைவசமயமானது, நான் அதைக்கிரகித்தபிரகாரம் என் ஆன்மாவிற்குமுழுவதும் திருப்தியைக்கொடுக்கின்றது. அது என் சீவியம் முழுவதிலும் வியாபித்துநின்று, உங்களுடைய மலையுச்சிப்போதனைதானும் கொடுக்காத மன ஆறுதலைப் பகவத் கீதையாலாகவும் உபநிஷதங்கள் வாயிலாகவும் எனக்கு என்றும் கொடுத்துத் தலங்குகின்றது உங்களுடைய குருநாதனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மலையுச்சிப்போதனையை நான் இகழ்வாகப் பேசுகிறேனென நீங்கள் சிந்திக்கவேண்டாம் அப்போதனையின் மாட்சிமையை யான் ஏற்றுக்கொள்ளவில்லையெனவும், அன்றேல் அதனுட்பொதிந்துகிடக்கின்ற எத்தனையோ விலையுயர்ந்த கற்பனைகளெல்லாம் என்மனதிற் படியவில்லையெனவும், நீங்கள் நினைக்கவேண்டாம். வியாகூலங்கள் என்னைச் சூழ்ந்தகாலத்தும், செய்யும் முயற்சிகள் அனுகூலப்படாது தோல்விகளானவை என்னை நோக்கி நிற்கும் காலத்தும், எந்தவிதத்திலேனும் எனக்கு ஊக்கத்தைக் கொடுக்கக்கூடிய ஓர் சிறுபிரகாசந்தானும் எனக்கு எட்டாதிருக்கும் காலத்தும், நான் எங்கே செல்வேன்? எனது வேதமாகிய பகவத் கீதையைத் திறந்து வாசிப்பேன் அங்கே எந்த வாக்கியம் என் கண்ணிற்பட்டதோ அதே என்னை ஆதரித்துநிற்கும். தாங்கொணாத் துயரங்களின மத்தியில் நான் பரிமள நகைப்புற்றிருக்கும் பாக்கியம் எனக்குண்டாகும். என் வாழ்க்கையானது அனேகமான துர்ப்பாக்கியங்களையுடையதாயிருந்தும், அவையாவும் எனது மனத்தில் யாதேனுங் களங்கத்தையுண்டுபண்ணாததின் காரணம் யாதெனில், பகவத் கீதையானது எனக்குப் போதித்து நிற்கின்ற மதுரவாக்குகளன்றி வேறொன்றல்ல இவ்வனுபவங்களை யான் இன்றைக்கு உங்களுக்குச் சொல்லப்புகுந்தது, என்னுடைய தற்போதைய நிலையை நீங்கள் முற்றும் அறிந்து, நாம் இருசாதியாரும் இன்னும் கிட்டியசகவாசத்தையுடையோமாவோம் என்னும் ஆசைபற்றியே.

நான் பைபிலைப்புத்தகத்தைப்படித்ததுமன்றி கிறிஸ்தவ நண்பர் எனக்குதவிய அதன் வியாக்யானங்களையெல்லாம் ஆராய்ந்ததுமன்றி, இன்னுமனேகமான மறுசமய சாஸ்திரங்களையெல்லாம் வாசித்திருக்கின்றேன். உண்மையாகவே சமய ஆராய்ச்சிசெய்வோன் எல்லாமார்க்கங்களினதும் வேதங்களைக்கற்றுத் தெளிந்துகொள்ளவேண்டுமென்பது ஓர் நியதியாகும். மகமதியருடைய கோருனைப்படித்தேன். எல்லாம் கற்றும் யான் முடிவில்தெரிந்துகொண்ட உண்மையாதெனில் சமய உண்மை யளவில் அவைபெரும்பான்மையும் ஒத்திருந்தன. ஆனால் எல்லாம் குறைவுடைத்தாயே தோன்றின. இச்சாஸ்திரங்களெல்லாம் மனுஷருடையசக்தியற்றஇருதயத்தால் அனுபவத்திற்கு மொழிபெர்க்கப்பட்டவை யானமையினால் அவசியமாகவும் இயல்பாகவும் குறைவுடையனவாகவேயிருக்கின்றன. அனேகமாகச் சமய சாஸ்திரங்கள் மனுஷரால் விபரீதமாக விளங்கப்பட்டுக்கிடக்கின்றன. ஒரே சாஸ்திரத்திற்குப் பலவிதமானவும், சிலவற்றில் மாறுபாடுடையதானவுமான வியாக்யானங்களும் உரைகளும் உண்டுபட்டிருக்கின்றதையெல்லாச் சமயங்களிலும் நான மிகவும் துக்கத்துடன் பார்த்தேன் என்னுடைய ஆன்மாவை யான் திருத்திப்படுத்தப்புகின் இவையெல்லா மெனக்குதவாவெனக் கண்டேன். என்னுடைய வழியை யானே உணரவேண்டுமென்பதுவும், இறைவனாகிய அப்பரம்பொருளையே யான் எனதுபிரத்தியட்சமான ஆசிரியனெனக்குவழிகாட்டியாக விருக்கவேண்டுமென்பதுவும் யான் அறிந்துகொண்டேன். மனுஷனானவன் தன் செயலற்றதில்லையெனவுணர்ந்து சுதியற்றவிடத்தும் தாழ்மையாகவிருக்கும் நிலையிலேயே கடவுள் தனதுணையாயுதவுவாரெனச் சமஸ்கிருதத்தில் ஓர் வாக்கியமுண்டு. உங்களுட் சிலர் தமிழைக்கற்றதவர்களாயிருக்கக்கூடும். தமிழிலேற்றவேயே கடவுள்காப்பாரெனனும் கருத்துடைய ஓர் முதுமொழி தமிழிலும் யான் படித்தேன். என அநுபவத்தின வித்தகத்தை வேண்டுமாயின் நீங்கள் உற்றுணர்ந்துகொள்ளலாம்."

(வரும்.)

20-9-25. மு. வைரமுத்து.

### விளம்பரம்

காரைநகர் கிழக்கு சுந்தரஐயர் சரவணப்பெருமாட் குருக்களாகிய நான் எனதுபெயரைச் சுந்தரஐயர் சரவணபவக்குருக்கள் எனமாற்றுகிறேனென்றும் இன்றுதொடக்கம் சரவணபவக்குருக்களென்று கையொப்பமிட்டு வருவேனென்றும் இத்தால் வெளியிடுகின்றேன்.

(Mis. 713) சு. சரவணபவக்குருக்கள்

### அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

### தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை.
தொண்டமானாறு,
தந்திவிலாசம்
று பி. வல்லுவெட்டித்துறை. (H. 37.)

### "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ருயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்,
(H. 40.) S. இந்தியா.

### புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

Y. 39).

### பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

### இனம் காலண்டர் இனம்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் கெ. 2-ம் கெ வெள்ளியிலும் மிச்சம் தப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதரக்கொடி கைசோர்வை, முகப்புக்கொடி, காந்தி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் சொப்பு கம்மல் தோடு கடுக்கன மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லீஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வே. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

### சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.

### கண்டுபிடித்துத் தருபவருக்கு வெகுமதி கொடுக்கப்படும்.

எனது தம்பி ஏறக்குறை 10 மாசங்கட்கு முன்னர் தாய்வீட்டிலிருந்து தன்னெண்ணப்படி புறப்பட்டு சிலகாலம் மாத்தளை ஆஸ்பத்திரியிலும் பின் பொல்காவலை ஆஸ்பத்திரியிலும் இருந்ததாகவும் அதன்பின் புறப்பட்டுச் சென்றவிடம் தெரியவில்லை யென்றும் எனது தாயார் : கடிதவாயிலாக எனக்குத் தெரிவித்திருக்கின்றார்.

விபரம்.

இவர் எழுத்துப்பெர் சபாபதி; முருகேசு எனவும் முருகையா என்றும் வழங்கப்படுவர். பேச்சுச் சிறுது கொன்னை. மத்தபுத்தி உடையவர். கால் சிறிது வளைந்தும் முதுகு சற்றே கூனியும் உள்ளவர். வயசு 20 வரையி லிருக்கும். ஆனால் வயசிற்குத்தக்க தோற்றமில்லை. ஒடுங்கிய நெற்றியும் சற்றே பரந்த முகமும் உடையவர். மாநிறமுள்ளவர். இவரை யாராயினும் கண்டுபிடித்தால் கீழே சொல்லப்படும் தாயார்விலாசத்திற்குஎழுதி அறிவித்தாலும் ஒப்படைத்தாலும் அப்படிச்செய்பவருக்குத்தக்க கைம்மாறு கொடுக்கப்படும்.

தாயார் விலாசம்:-
வேதநாயகம் அம்மாள்,
செட்டிகுறிச்சி
சுழிபுரம்,
யாழ்ப்பாணம்.

சிவப்பிரகாசபிள்ளை
சோமசுந்தரன்,
P. M. Padang Serai
Kedah.
11—9—25

(Mis 715)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-கிழக்கு செ. நா. செ சாமிநாதன் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

| நம். | தி. | ரூபா | ஊர் பெயர் நகைகளின்விபரம் |
|---|---|---|---|
| ஆகஸ்ட்மீ | | | |
| 4341 | 17 | 45 | கீரிமலையடி கந்தர் ஆறுமுகம் பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 43?9 | 17 | 60 | சோனகதெரு ம அப்துல் கமீது பொன அஞ்சுபட்டு மணிக்கோர்வை 1 |
| 4352 | 18 | 25 | டை க. நயினாமுகம்மது பொன் அஞ்சுபட்டு மணிக்கோர்வை 1 |
| 4359 | 18 | 60 | டை பசே மீராசாயபு பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 4375 | 20 | 20 | கொழும்புத்துறை த குழந்தைவேலு பொன்னில் இமிட்டேசன் கவுத்தோர் 1 |
| 4383 | 20 | 60 | வண்மேற்குச அப்பையா பொன பட்டணக்காப்புச்சோடி 1 |
| 4400 | 25 | 55 | சோனகதெரு மு அப்துல்காதர் பொன் கிளாட்டியல் 1 |
| 4409 | 28 | 50 | சாவகச்சேரி கி இளையதம்பி பொன கம்பிப்பூரானட்டியல் 1 |
| செப்டெம்பர்மீ. | | | |
| 4442 | 2 | 35 | வண்கிழக்கு ந வைத்திலிங்கம் பொன் பீலிக்காப்புச் சோடி 1 |
| 4454 | 3 | 65 | சுன்னாகம சின்னையா தம்பையா பொன பட்டணக்காப்புச்சோடி 1 |
| 4462 | 3 | 20 | சோனகதெரு அ சுலையுமான்லெவ்வைமரைக்காயர் பொன அலுக்கொத்து 12 |
| 4496 | 8 | 135 | நல்லூர் சின்னத்தம்பி நாகலிங்கம் பொன் தாலிச் சங்கிலி 1 |
| 4509 | 9 | 50 | கொழும்புத்துறை மு. சியாகர் பொன கம்பிப்பூரானட்டியல் 1 |
| 4512 | 9 | 70 | கந்தர்மடம் ந. நாகலிங்கம் பொன புலிநகம் கோர்த்த ஒற்றைப்பட்டுக்குண்டுச் சங்கிலி 1 |
| 4536 | 14 | 35 | சிவியாதெரு பொ. குப்பையா பொன கம்பிப்பூரானட்டியல் 1 |

விற்பனவு:—குரோதனஞு புரட்டாதிமீ 19உ (4-10-25) சனிக்கிழமை கா. ஸ 10 மணியளவில் மேற்படி நகைகள் பிறகேலமாக மேற்படி டை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெர்ந்தியோர்.

(Mis 716.)

## உலகம் பலவிதம்

சூரபன்மன் சமுத்திரத்தின் ஒரு பாகத்தை மண்கொண்டு நிரப்பித் திடராக்கி அவ்விடத்தில் மகேந்திரபுரியெனப்படும் தனது புதிய நகரத்தை அமைத்து அங்கிருந்துகொண்டு 1008 அண்டங்களையும் 108 யுகங்களாக அரசாண்டானென்றும் பின்னர்ச்சூரபன்மனைச் சுப்பிரமணியக்கடவுள் வதைத்தகாலத்தில் அவனது நகரத்தையும் தமது திருக்கரத்திற் பொருந்திய வேற்படையை ஏவி அழித்து அங்ஙனம் அழிந்த நகரத்தைக் கடல்கொள்ளச் செய்தாரென்றும் கந்தபுராணத்திற்சொல்லப்படுகின்றது. இவ்வாறே திரிலோகங்களையும் பரிபாலித்த இராவணனும் கடலை நிரப்பித் திடராக்கித் தன் மாளிகையையும் கோட்டையையும் அமைத்தனனென்றும் இராவணசங்காரகாலத்தில் ஸ்ரீராமபிரான் அவற்றையும் இராமபாணத்தாற் றுகளாக்கி வருணபகவானைக் கைப்பற்றும்படி செய்தனரென்றும் இராமாயணங் கூறும். காலித் துறைமுகத்திற்குச் சமீபமாக இருக்கும் கற்பாறைகள் இராவணனுடைய கோட்டையின் எஞ்சியபாகமென்பர்.

* * *

சூரபன்மன் இராவணன் என்னும் இவ்விருவருங் கொண்டிருந்த இந்த எண்ணம் இப்பொழுது நமது யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கத்தார் 'உள்ளந்தோறும் புகுந்துவிட்டது போலும். கொழும்புத் துறைக்குச் சமீபமாகவுள்ள துண்டி யென்னுமிடத்திற் கணித்தான கடலோரமாகச் சில பாகத்தை மண்ணினால் நிரப்பித் திடராக்கி அங்கே கொழும்பு நகரத்திலிருப்பதுபோல ஒருபூஞ்சோலை (Park) அமைத்தல்வேண்டுமென்று நமது பட்டினபரிபாலனசங்கத்தார் நோக்கங் கொண்டிருக்கின்றார்களென அறியலானேம். இவ்வாறான பூந்தோட்டம் எதன்பொருட்டு என்ற உணர்ச்சி யாழ்ப்பாணத்துள்ள சாமானிய சனங்கள் பலரிடத்தில் இல்லையாகும். ஏனென்றால் இங்குள்ளார் பலருக்கு இது புதிதாகும். இப்படிப்பட்ட பூந்தோட்டங்களிலே மாலைக் காலத்தில் துரைமக்களும் துரைப் பெண்களும் சமேதராகவும் தனித்துஞ் சென்று சுத்தமான காற்றையும் சுகத்தையும் நுகர்ந்துகொண்டு சந்தோஷமாகப் பொழுது போக்குவர். கொழும்பு முதலிய பட்டினங்களிலே சாமானிய சனங்களும் வாலிபரும் சிறுமியரும் தனித்தும் கூட்டமாகவும் அங்கு வந்திருந்து பொழுது போக்குவர். ஆரம்பத்தில் இப்பூந்தோட்டங்கள் சனநெருக்கமான பட்டினங்களில் நல்லநோக்கத்துடன் அமைக்கப்பட்டு நன்மையாக உபயோகிக்கப்பட்டன. ஆனற் காலகதியில், இப்பூஞ்சோலைகள் மரியாதைக்குடன் பட்டோரால் அருவருத்து விலக்கப்பட, தூர்த்தரும் மதுபானிகளும் சஞ்சரிக்கற் கிடமாகவும் எல்லாவகையான தூர்க்கிருத்தியங்கட்கும் வாசஸ்தானமாகவும்மாறலாயின. லண்டன் நகரத்திலேயுள்ள "ஹைட் பார்க் (Hyde Park) என்னும் பூஞ்சோலையில் நிகழும் தூர்க்கிருத்தியங்களைப்பற்றிச் சிலவருடங்கட்கு முன்னர் லண்டன் நகரத்திலிருக்கும் பிரதம குருவானவர் பத்திரிகை வாயிலாக வெளியிட்டு அப்படிப்பட்ட பூஞ்சோலை இல்லாதொழிதல் மிகவும் நன்மையாகுமென்றும் கூறியிருந்தார். அவர் கூற்றை மொழிபெயர்த்து அக்காலத்தில் இப்பத்திரிகையில் வெளியிட்டுள்ளேம். கொழும்பு நகரத்துள்ள இப்படிப்பட்ட பூஞ்சோலைகளில் நிகழும் அநர்த்தங்கள் பல. கொழும்புச் சட்டநிருபணசபை மண்டபத்திற்கு எதிரேயுள்ள "கோர்டன்" பூந்தோட்டத்தின் ஒரு பாகத்தை அரசினர் அடைத்துப் பிறர் அங்குச் செல்லாவண்ணம் தடுத்திருக்கின்றனர். மரங்கள் அடர்ந்துள்ள அப்பாகத்திலே மாலைக் காலத்திற் பல அக்கிரமங்கள் நடந்துவந்தமையினாலேயே அரசினர் அப்பாகத்தை அடைப்பித்தனரெனச் சொல்லப்படுகின்றது.

* * *

யாழ்ப்பாணப்பட்டினத்திலே எங்கள் பட்டினபரிபாலன சங்கத்தார் பட்டினவாசிகள் பொருட்டுச் செய்யவேண்டிய நன்மைகளும் திருத்தங்களும் பலவுள. மாசக்கணக்கில் மழை பெய்தலின்றியிருக்கும் இப்பட்டினத்திலே மோட்டாரகள் இடையின்றிச் சஞ்சாரஞ்செய்வதனால் புழுதிப்படலமெழுந்து தெருவோரத்துள்ள வீடுகளிலும் தெருவழியேசெல்வோர்மீதும் படிந்தபடியேயிருக்கின்றது. இதனால் முன்னொருகாலத்துமில்லாப் பல நவீனரோகங்கள் இங்கே பரவலாயின. இவற்றைத் தடுக்கும்வண்ணம் தினந்தோறும் பிரதானதெருவீதிகளைத் தண்ணீர்த்தெளித்தற்கான ஒழுங்குகள் செய்தல்வேண்டும். அத்தியவசியமான சில இடங்களிலே தீபஸ்தம்பங்கள் நாட்டித் தீபம் ஏற்றப்பட்டிருப்ப ஆவசியகமான சில இடங்களிலே தீபம் இல்லாதிருக்கின்றது. தெருவீதியில் ஏற்றப்படும் தீபங்களுட் பல கிரமமாக ஏற்றப்படாதிருக்கின்றன. சில மங்கியபடியே எரிகின்றன. இவற்றைக் கிரமப்படுத்துதல்வேண்டும். தெருவோரங்களிலுள்ள கான்கள் பல அழுக்கோடும் துர்நாற்றத்தோடும் கூடியிருக்கின்றன. இவைகளை அகற்றுதல்வேண்டும்.

* * *

யாம் சிலதினங்கட்குமுன்னர் இப்பத்திரிகையில் வெளியிட்ட பிரகாரம், இப்பட்டினத்திலே வீடுகள் தோறும் வளர்க்கப்படும் பசுக்கள் போய்மேய்தற்கான பசுந்தரைப்புற்றரை இப்பட்டினத்திலில்லை. இந்நிலைமையினாலே இங்கே பசுக்களை வளர்த்தலும் சுத்தமான பாலைப்பெறுதலும் தாய்ப்பாலில்லாச் சிறு குழந்தைகளைப் பசுப்பாலூட்டிவளர்த்தலும் இயலாதனவாயிருக்கின்றன. பட்டினத்திற்குச் சமீபமாகவுள்ள கிராமங்களிலிருந்து பால் கொண்டுவந்து விற்பவர்கள் பாதிக்குப் பாதி தண்ணீர் கலந்தே அப்பாலை விற்கின்றார்கள். தண்ணீர் கலந்து பால் விற்காதபடி தடுத்தற்குப் பால் பரிசோதித்தற்கான சிலரை ஆவசியகம் நியமித்தல்வேண்டும். பசுக்கள் மேய்வதற்காகிய புற்றரையில்லாத இப்பட்டினத்திலே பசு வளர்ப்பவர்கள் தங்கள் பசுக்கள் சதாகாலமும் கட்டியபடியே நின்று அலுக்காது சிறிது நடந்து மேயும்வண்ணம் அப்பசுக்களை நீளமான ஒரு கயிற்றைத் தொடுத்து வெளியே கொண்டுவந்து தெருவோரத்துள்ள கான்களிற் சிறிது நேரம் மேயவிட்டுக்கொண்டு நிற்பது வழக்கம். இப்படிச் செய்வதினாலே பசுக்களுக்கும் பெருமாறுதலும் அவற்றை வளர்ப்போர்க்குச் சிறிது ஆறுதலும் உண்டு. இங்குள்ள தெருக்கான்களில் அதிகம் புல்லு உண்டென எவரும் எண்ணவொண்ணாது. இக்காலத்துள்ள சில வாலிபர் விட்டிருக்கும் மீசைபோல, தெருவீதிக்கும் வாய்க்காலுக்கு மிடையேயுள்ளஓரத்திலே மாத்திரம் அற்ப புல்லுண்டு. அங்கே பசுக்களைக் கொண்டுபோய் மேயவிட்டுக்கொண்டு நிற்கவொண்ணுதென அதிகாரிகள் வற்புறுத்தி நிற்கின்றனர் இங்குள்ள பசுக்கள் மேய்வதற்கு ஒரு சிறந்த புற்றரை அமைக்க முடியாது பணத்திற்குக் கஷ்டப்படும் பட்டின பரிபாலன சங்கத்திற்குக் கடலைத் திடராக்கிப் பூஞ்சோலை அமைத்தற்குப் பணம் எங்கிருந்து வரப்போகின்றதோ யாம் அறிகிலேம்!

* * *

இனி, பூஞ்சோலை அமைத்தற்கு இவர்கள் உத்தேசித்த ஸ்தானம் எங்கே யென்று பார்த்தால் பட்டினத்தின் ஒரு மூலையிலுள்ள கொழும்புத்துறைக்கு அணித்தாகவாம். பட்டினத்தின் மத்தியின் இப்பூஞ்சோலை அமைக்கப்படின் ஒருபோது அதனுற் சிறிது நன்மையுண்டெனச் சொல்லலாகும். இவர்கள் குறித்த இடத்திற்குச் செல்வதற்கு மோட்டர் வண்டியேனும் தூரகாதமேனும் றிக்ஷோ வண்டியேனும் வேண்டும். ஆங்குச் செல்வோர் தத்தம வீட்டில் வசிக்கும் ஏனையோர்க்குப் பயணஞ் சொல்லிவிட்டுத்தான் போகவேண்டி நேரிடும். பட்டின பரிபாலன சங்கத்தாருக்கு மிக்க விநயத்தோடு தெரிவிப்பது யாதெனில் இப்பொழுது இங்கே பூஞ்சோலை யொன்று தேவையில்லை. இங்குளளார் "பறக்கிற காகம் இருக்கிற கொம்பர் அறியாது" என்றவாறு சீவனஞ்செய்தற்கே கஷ்டப் பட்டுக்கொண்டு பிழைப்பின் பொருட்டு ஓடித்திரிகின்றார்கள். "சருச்சரிக்க நேரமன்றிக் கூதற்காய நேரமில்லாத்தன்மை போல" ஏதும் முயற்சி பார்த்துத் தங்கள் தங்கள் குடும்பத்தைப் பாதுகாத்தற்கு நேரமின்றித் திரியும்போது பூஞ்சோலையிற் சென்று பொழுதுபோக்க இவர்களுக்கு நேரம் எப்படிக் கிடைக்கும்? ஆதலால் இந்த வியர்த்தமான பிரயத்தனங்களிற் பணத்தைச் செலவிடுதலை யொழித்துப் பட்டினவாசிகட்கு உண்மையாகப் பயன்படும் விஷயங்களை அவர்கள்வாயிலாகவே அறிந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

* * *

எங்கள் பட்டினபரிபாலனசங்கப் பிரதிநிதிகளை இரண்டாம்முறை தெரிவுசெய்தற்கான காலம் சமீபித்துவிட்டது. பட்டின பரிபாலன சங்க எல்லைகட்குரிய சில வட்டாரங்கட்குத் தாங்கள் பிரதிநிதிகளாக வருதல்வேண்டுமென்று சிலர் புதிதாக முயற்சி செய்கின்றார்கள். தங்கள பரிபாலன காலவெல்லை விரைவிலே முடியப்போகின்றதே யென்று பழைய அங்கத்தவர் சிலர் பெருமூச்சோடு நாளெண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பழைய அங்கத்தவராயிருப்போரும்பலர் அடுத்தமுறையும் தாங்களே வட்டாரப் பிரதிநிதிகளாயிருந்து தாங்கள் இதுகாறும் ஊரவர்கட்குச் செய்துவந்தநன்மையையோ அதற்கு மாறானதையோ முடிவுறச் செய்து தங்கள் திறமையை ஊரவர்கட்குக் காட்டிவிட்டுத்தான் இச்சங்கத்தை விட்டு நீங்குதல்வேண்டுமென்ற நோக்கங் கொண்டிருப்பதாகக் காணப்படுகிறார்கள். நன்மையான கருமங்களை இதுகாறும் செய்துவந்த பிரதிநிதிகள் தங்கள் ஸ்தானத்தைவிட்டுச் சந்தேகப்படவேண்டியதில்லை. "கருப்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானேவரும்" என்பர். பழையவர்கள் புதியவர்களாய் வருவார்க்கு இடங்கொடுப்பதுதானே முறையாகுமென்று முருகேசு சொல்லிக்கொள்ளுகிறார். முந்தியிருந்த சுகாதார சங்கத்திற்கும் பிந்திவந்த பட்டினபரிபாலனசங்கத்திற்குமிடையேயுள்ள பேதம் முன்னைக்காட்டிலும் இப்பொழுது அதிகமாக வரியேறுதல்தானே யென்றகாரணத்தினால் ஊரவர்கள் பட்டினபரிபாலனம் இல்லாதொழியப் பழையபடி சுகாதாரசங்கம் வந்தாலோ என்றுவிரும்புகின்றார்கள். பட்டினபரிபாலன சங்கப்பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் விஷயத்தில் இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன கூடவந்த குரங்குகள் ஆண்டாலென்ன என்றவாறு ஊரவர்கள் அலட்சியமாயிருக்கின்றனர்.

---

### "பொன்மழை பொலிந்து வாழ்க"

யாழ்ப்பாணத்தில் ஏறக்குறைய, சென்ற ஆறுமாச காலமாகப் பெய்யாதொழிந்த மழை இட்பொழுது பெய்யத் தொடங்கியிருக்கின்றது. இம்மழை இங்குள்ளார் எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும் பொன்மழையாம்.

### ஜப்பானில் தீ விபத்து.

ஜப்பானிய அரசிளங்குமாரனின் மாளிகையும் தீக்கிரையாகி அழிந்தது.

### மரத்தி லிருந்து விழுந்து மாண்ட சிறுவன்.

சென்ற வாரம் கடுகணுவையி லுள்ள பாடசாலைச் சிறுவன் ஒருவன் மரத்திலிருந்து தவறிவீழ்ந்து உடனே இறந்தனன்.

### பிரித்தானிய கப்பல் வேலையாட்கள் கடலில் மாண்டனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை காச்சி என்னுமிடத்திலே "உவார்வீன்ல்" என்னும் கப்பலிலுள்ள வேலையாட்கள் நால்வர் கடலில்நீராடச் சென்றபோது உக்கிரமான திரையிலகப்பட்டுக் கரையேறமாட்டாதவர்களாய் மாண்டனர்.

### அபின் வைத்திருந்தவனுக்கு 350 ரூபா அபராதம்.

சிலநாட்களுக்குமுன் வெலிக்கமத்திலே பக்கீர் என்னும் ஒருவன் ஒரு அவுன்ஸ் 20 கிறேன் அபின் வைத்திருந்தானென மாத்துறைப்பொலிஸ்கோட்டிலே குற்றஞ் சாட்டப்பட்டு 350 ரூபா அபராதம் அது இயலாதாயின்மூன்றுமாதக்கடூழியச்சிறை விதிக்கப்பெற்றனன்.

### வீட்டுவாயிலில் நிகழ்ந்த கொலை.

சென்ற சனிக்கிழமை இரவு கழுத்துறையிலே ஆபிரகாம் என்னும் ஒருவன் சில உணவுபொருள்களுடன் வீட்டுக்குத் திரும்பி வாயிலிற் புகுந்தபோது பகைவன் ஒருவனுற் கொலைசெய்யப்பட்டனன். சமீபத்தில் அங்கு நிகழ்ந்த களவு விஷயமாக ஆபிரகாம் என்பவன் பொலீசருக்குத் துணைபுரிந்தமையே கொலைக்குக் காரணமாம்.

### புகைரதம் ஊரும்போது இறங்கவொண்ணுது.

இந்தச் செப்டெம்பர்மீ 14௳ ஹோமகாமப் புகைரதஸ்தானத்தில் ஓர் புகைரதம் நகர்ந்து செல்லும்போது ஒரு சிங்களப் பெண் கீழே இறங்க முயன்றனள். அப்பெண் மேடைமேல் வீழ்ந்து அதிக காயமுற்றுக் கையுமொன்று முரிந்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டுச் சென்ற ஞாயிற்றுக்கிழமை இறந்தனள்.

### கள்ளர் கொடூரம்.

சென்ற சில மாசங்களாக அராலியிற் களவு அதிகமாக நடைபெறுகின்றது. களவு கொடுத்த வீடுகள் முப்பதுவரையிலுண்டு. களவினுற் கலக்கமடைந்த வீடுகள் அநேகம். தினந்தோறும் கள்வர் கலக்கம் உண்டாகின்றது. கள்ளர் அகப்படவில்லை. கறுப்பு உடுப்புக்களுடனும் ஒருவித விளக்குடனும் கள்வர் உலாவுகின்றனரெனச்சனங்கள் பேசிக்கொள்கிறார்கள் தலைமைக்காரருக்கும் பொலிஸ்பகுதியாருக்கும் இக்கொடூரம் பலரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பெண்களும் ஆண்களும் இரவில் நித்திரை கொளவது அபூர்வம். இதுவும் காலக்கொடுமைதானுக்கும் என ஒரு நிருபர் தெரிவிக்கின்றார்.

---

### அகில இந்திய மகாஜன சபை.

வருகிற டிசெம்பர்மீ கான்பூரிற் கூடும் மகாஜனசபை அக்கிராசனர் பதவிக்குப் பல மாகாணங்களிலுமிருந்து பலர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் எல்லோரிலும் ஸ்ரீமதி சரோஜினிதேவிக்கே அதிகமானேர் சம்மதங் கொடுத்திருக்கின்றனர்.

### நான் ஒரு போர்வீரனுயிருந்தவன்.

போர்முனைக்குச் சென்று திரும்பிய ஜோட்ஸ் மாட்டின் மாக் என்னும் ஒருவன் ஹெற்றவலமுல்லா என்னுமிடத்துள்ள கிறீஸ்த பிரசங்கமண்டபக் கதவை உடைத்துத் திறந்து திருடினனெனச் சென்றதிங்கட்கிழமை கொழும்புப்பொலிஸ்கோட்டிலே குற்றஞ்சாட்டப்பட்டனன். எதிரி தான் போர்முனைக்குச் சென்று திரும்பியவனென்றும், மூன்றுநாட் பட்டினியாக இருந்தமையினால் திருடினேனென்றும் கூறினன். நீதிபதி விசாரணை நடத்தி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு டிஸ்திறிக் நீதிபதியென்ற முறையில் ஆறுமாதக்கடூழியச்சிறைவிதித்தனர்.

### தொழிற்சாலையில் வேலைசெய்வோர்

பம்பாயிலே பெரும்பான்மையான தொழிற்சாலைகள் வேலையாட்களின்றிப் பூட்டப்பட்டிருக்கின்றன, சென்றசெவ்வாய்க்கிழமையும்பன்னிரண்டுதொழிற்சாலைகள்பூட்டப்பட்டன. அங்குள்ள எண்பத்திரண்டு தொழிற்சாலைகளுள இப்பொழுது பன்னிரண்டு தொழிற்சாலைகளிலேயே ஒருவாறு வேலை நடைபெறுகின்றது. அவைகளும் பாதிக்கப்படுமெனச் சொல்லப்படுகிறது. இப்பொழுது வேலைசெய்ய மறுத்து நிற்போர் தொகை 135,000. மொஸ்கோவிலுள்ள நெசவு தொழிலாளர் அநுதாபத்திச் சமாசாரம் அனுப்பி வேலைசெய்ய மறுத்து நிற்போரின் உதவிக்காக அகில இந்திய வியாபார ஐக்கிய மகா நாட்டுக்கு 10,000, ற்பிள்ஸ் (ருசிய நாணயம) உதவினர்.

### குடிகார மோட்டர்ச் சாரதிக்கு ஒருமாதக் கடூழியச் சிறை

சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பிலே பாம்பன்கடைக்குச் சமீபமாயுள்ள தெருவில் ஒருமோட்டர்பஸ்வண்டிச் சாரதி மதுபானத்தில் மூழ்கி அதிக வேகத்துடன் பேராபத்து நிகழக்கூடியவிதமாக வண்டியைச் செலுத்திச் சென்றான். அதனுள்ளிருந்த பிரயாணி ஒருவர் வெள்ளவத்தைச் சந்தியில் ஒருவாறு இறங்கி அங்குக் காவல்புரிந்து நின்ற பொலிஸ்காரனுக்கு விஷயத்தை வெளியிட்டனர். பொலிஸ்காரன் குறித்தசாரதியைப் பொலிஸ்தானத்துக்குக் கொண்டுபோய் மறுதினம் நகரசங்க நீதிஸ்தலத்தில் அவன் மீது வழக்குத் தொடர்ந்தனன். நீதிபதி சாரதிக்கு ஒருமாதக் கடூழியச் சிறை விதித்து, சாரத்திய அனுமதிப்பத்திரத்தையும் ஆறுமாத காலத்துக்குத் தடைப்படுத்தினர்.

---

### மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதய சங்கம்.

இச்சங்கத்தின் விசேஷ கூட்டம் ஒன்று நிகழும் குரோதனவரு ஆவணிமீ 22-ந் திகதி (6—9—25) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 7-½ மணியளவில் மயிலிட்டி தெற்குச் சைவ மடத்தில் நடந்தேறியது. அத்தருணம் தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ. தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள் "சாதிசமயாசாரம்" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக்கொண்டு, தற்காலம் நம்மவர்கள் ஆங்கிலக் கல்வியைக் கற்று அந்நிய நாகரிகத்தைக் கைக்கொண்டு நடப்பதால் நம பாஷையும், ஆசாரங்களும் குன்றிவிட்டனவென்றும், அவற்றை நாம் இனி எவ்வாறு விலக்கி, நம் சாதிக்கும் சமயத்துக்கும் ஏற்றவாறு நடக்கவேண்டு மென்றும், அதிக விரிவ கச் சபையிலுள்ள ஒவ்வொருவருடைய மனத்திலும் பதியுமாறு பேசிப் பிரசங்கத்தை முடித்தனர். பின் மேற்படி வித்தியாசாலை ஆசிரியருள் ஒருவராகிய ஸ்ரீ. சுர்னையா அவர்களும், இச்சங்கக் காரியதரிசியும் குறிப்புரை கூற கூட்டம் 9 மணியளவில் தேவாரபாராயணத்துடன் முடிவுபெற்றது. இன்னும் இச்சங்கத்தின் வழமையான கூட்டம் ஒன்று இந்த மாசம் 5-ந் திகதி (20—9—25) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 8 மணியளவில் மேற்கூறிய இடத்தில் ஸ்ரீ. சி. சுவாமிநாதன் பீ. ஏ. அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் நடைபெற்றது. அத்தருணம் இச்சங்கத்தைச் சேர்ந்த மாணவருள் ஒருவரால் "மாணவர் அறிவுவிருத்தி" என்னும் விஷயமாக ஓர் சொற்பொழிவு செய்யப்பட்டது. பின் இச்சங்க அங்கத்தவர்கள் இருவருக்கிடையே "தற்காலம் நம் மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி அவசியமா, அல்லது அவசியமில்லையா" என்னும் விஷயமாக ஓர் தர்க்கம் நடந்தது. ஈற்றில் சபையாரும் அக்கிராசனரும் குறிப்புரை கூறப்பட்ட பின் கூட்டம் 10 மணியளவில் முடிந்தது.

கடிதர்.

[கடிதர் தர்க்க முடிவையும் வெளியிட்டிருத்தல்வேண்டும். —பத்திராசிரியர்.]

